## பதிவுப் படிவம்

பெயர் :

பாலினம் :

கல்வித் தகுதி :

பணி நிலை : பேராசிரியர் / ஆய்வாளர்

கல்லூரி முகவரி :

அலைபேசி எண் :

மின்னஞ்சல் :

ஆய்வுத் தலைப்பு :

தொடர்பு முகவரி :

**கட்டுரைகள் வந்துசேர வேண்டிய**
**கடைசி நாள் 15.10.2021**

## கருத்தரங்கக் குழுவினர்

முனைவர் ப. செந்தில்குமார்
கல்லூரி முதல்வர்

முனைவர் சொ. மகாதேவன்
தமிழ்த்துறைத் தலைவர்

## கருத்தரங்கச் செயலாளர்
மற்றும்
## ஒருங்கிணைப்பாளர்


முனைவர் ம. சுஜாதா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
99407 19522

## இணை ஒருங்கிணைப்பாளர்கள்

**(தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்கள்)**

முனைவர் ப. தனஞ்செயன்
முனைவர் ச. இராஜம்
திருமதி செ. ஜோசப்குளோரி
முனைவர் ஜா. பவித்ரா
முனைவர் இரா. செங்கொடி

**கருத்தரங்கில் பங்கேற்கக் கட்டணம் ஏதும் இல்லை**




# சர் தியாகராயா கல்லூரி

(தேசியத்தர மதிப்பீட்டின் 'B' தகுதி பெற்றது)
பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை – 600 021

## தமிழ்த்துறை

மற்றும்

**அகத்தர மதிப்பீட்டு அமைப்பு**
**நடத்தும்**

**இணையவழி**

## தேசியக் கருத்தரங்கம்

## படைப்பிலக்கியங்களில் அழுத்தப்பட்ட மக்கள் வரலாறு

**நாள் : 23-10-2021 & 24-10-2021**

தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுரைகள்
சர்வதேசத் தமிழ் ஆய்விதழில்
( UGC - Care Listed Joumal )
வெளியிடப்படும்

கட்டுரையைப் பின்வரும் மின்னஞ்சல் மூலமாகச் சமர்ப்பிக்கலாம்
**E-mail : stctamil2021@gmail.com**
தொடர்புக்கு: 99407 19522, 96001 33522

## பேரன்புடையீர்,

வணக்கம்,

சமூக நீதி காத்த வள்ளல் வெள்ளுடை வேந்தர் சர் தியாகராயரின் பெயரில் விளங்கும் இக்கல்லூரி 1950–ஆம் ஆண்டு துவங்கப்பட்டு செவ்வனே கல்விப்பணியாற்றி வருகின்றது. கல்வியே சமூகத்தில் பின்தங்கியுள்ள மக்களை உயர்த்தும் ஒரே கருவியாகும் என்ற அன்னாரது கொள்கையை நடைமுறைப்படுத்தும் நோக்கோடு செயலாற்றும் இக்கல்லூரி வடசென்னையின் முக்கிய அடையாளமாகத் திகழ்கின்றது. பல்வேறு பாடப்பிரிவுகள் மற்றும் ஆராய்ச்சித் துறைகளுடன் இயங்கும் இக்கல்லூரியில் 3000க்கும் மேற்பட்ட மாணவ–மாணவியர் சுழற்சி-I, சுழற்சி-II, ஆகிய இரு பிரிவுகளிலும் பயின்று வருகின்றனர்.

எழுபத்தொரு ஆண்டுகால பாரம்பரியத்துடன் விளங்கும் இக்கல்லூரி துவங்கிய நாள் முதல் தமிழ்த்துறை தன் பணியைச் செவ்வனே ஆற்றி வருகின்றது. கல்லூரியின் முதல் மற்றும் இரண்டாமாண்டு மாணவர்களுக்கு அடிப்படைத்தமிழ் பாடத்தைக் கற்பிக்கும் பணி தமிழ்த்துறையின் வாயிலாக நடைபெற்று வருகின்றது. மேலும், தமிழ் இலக்கியத்தின் வழி, தமிழ்மரபைப் பரிணாமிக்கச் செய்யும் வகையில் தேசியக் கருத்தரங்கம், பன்னாட்டுக் கருத்தரங்கம், பயிலரங்கம், இணையவழிக் கருத்தரங்கம் எனப் பல்வேறு நிகழ்வுகளைத் தமிழ்த்துறை நடத்தி வருகின்றது. தற்போது **'படைப்பிலக்கியங்களில் அடித்தள மக்கள் வரலாறு'** எனும் பொருண்மையில் இக்கருத்தரங்கை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

## ஆய்வுப் பொருள்

'கலை கலைக்காகவா? கலை வாழ்க்கைக்காகவா?' என்ற நீண்டவிவாதம் இலக்கிய உலகில் இன்றளவும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகின்றது. ஆனால் 'இலக்கியம்' எனும் கலை அதன் அழகியலோடு பயனாக்கத்தையும் தரும்போது, காலத்தால் நிலைபெற்று வாழும் தன்மையைப் பெறுகின்றது. வரலாற்றுப் பக்கங்களில் மறைந்துபோன சமூகத்தின் இருண்மைப் பகுதிகளை இலக்கியத்தின் மெய்யொளி மூலமாகவே நாம் கண்டுணர நேர்ந்திருக்கிறது. அவ்வகையில் சாதியம், பால்பேதம், வர்க்க முரண்பாடுகள், பண்பாட்டுக் கட்டமைப்பு போன்ற நிலைகளால் சமூகத்தின் மையப் பகுதியிலிருந்து புறம் தள்ளப்பட்டு வாழும் கட்டாயத்திற்கு ஆளான அடித்தள மக்களின் வாழ்வியலைப் படைப்பிலக்கியங்கள் பதிவுசெய்துள்ள முறைமையை ஆய்வதே இக்கருத்தரங்கின் நோக்கமாகும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி இந்திய மக்கள் அனைவரும் சமம் என்றான போதும் இனம், மொழி, மதம், சாதி, வர்க்கம் எனப் பிளவுபட்ட சமூக அமைப்பின் ஊடாகச் சிக்கி தொடர்ச்சியாக நசுக்கப்பட்டு வரும் அடித்தள மக்கள்தம் பொருளாதாரச் சிக்கல்கள், அதீத வறுமை, கல்வி பெறுவதில் உள்ள சிக்கல்கள், சமூகப் புறக்கணிப்பு, சமூகத்தில் கடைநிலைப்பணிகளை மட்டுமே செய்ய வேண்டிய சூழல், நகரமயமாதலில் நடைபெறும் கட்டாய புலம்பெயர்வுகள், பாதுகாப்பற்ற வசிப்பிட சூழலால் பெண்களும் குழந்தைகளும் பாதிக்கப்படும் நிலை போன்ற இவர்தம் போராட்ட வாழ்வியலைப் பதிவுசெய்துள்ள இலக்கியங்கள் ஆய்வுக் களமாகின்றன.

## ஆய்வு எல்லை

சங்க காலம் தொடங்கி தற்காலம் வரை தமிழில் வெளிவந்துள்ள அனைத்துத் தமிழ்ப் படைப்புகளையும் ஆய்வுக்களமாகக் கொள்ளலாம்.

**கல்லூரிப் பேராசிரியர்கள், பள்ளி ஆசிரியர்கள், ஆய்வு மாணவர்கள், தமிழ் ஆர்வலர்கள் என அனைத்துத் தரப்பினரும் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிக்கலாம்.**

## ஆய்வுக் கட்டுரை அமைப்பு

1. ஆய்வுக்கட்டுரையைச் சொற்கோப்பில் (Word Document) A4 தாளில் 1.15 இடைவெளியுடன் 9 அச்சுப்புள்ளியில் லதா யுனிகோடு (Unicode) எழுத்துருவில் கணினிவழி தட்டச்சு செய்து stctamil2021@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 15-10-2021 திகதிக்குள் அனுப்புதல் வேண்டும்.

2. கட்டுரைத்தலைப்பு, கட்டுரையாளர் பெயர், பதவி, துறையின் பெயர், கல்லூரி / பல்கலைக்கழகம், நகரம், அஞ்சல் குறியீடு, நாடு, மின்னஞ்சல் முகவரி மற்றும் தொடர்பு எண் ஆகியன கட்டாயம் இடம்பெற வேண்டும்.

3. ஆய்வுச்சுருக்கம், குறிச்சொற்கள், முன்னுரை, ஆய்வுரை (துணைதலைப்புகளுடனும் விவாதங்களுடனும்) ஆய்வுப்பயன்கள், முடிவுரை ஆகியன உள்ளடக்கியதாக கட்டுரையின் வடிவம் அமைந்திருக்க வேண்டும்.

4. மேற்கோள்கள் (References Details) எங்கெங்கு எடுத்தாளப்படுகின்றனவோ அந்தந்த இடங்களிலேயே ஆசிரியர் பெயர், ஆண்டு (எ.கா. சுவாமிநாதர், உவே., 1984) மட்டும் குறிப்பிட வேண்டும்.

5. பார்வை நூல் விபரங்கள் (Citation Details) ஆசிரியர் பெயர், (வெளிவந்த ஆண்டு) புத்தகத்தின் பெயர், (வெளிவந்த பதிப்பு வரிசை) வெளியீட்டாளர் பெயர் மற்றும் முழு முகவரி கட்டுரையின் இறுதியில் இடம்பெற வேண்டும்.

6. ஆய்வு தன்னளவில் முழுமையானதாக அமைய வேண்டும். ஆய்வுக் கட்டுரைகள் சொந்த முயற்சியில் உருவான புதிய மற்றும் அசல் கண்டடைவாக இருத்தல் வேண்டும். இதற்குமுன் வேறெந்த ஊடகங்களிலும் வெளிவராததாக இருக்க வேண்டும்.

7. கட்டுரை தமிழில் மட்டுமே இருத்தல் வேண்டும். (கட்டுரைத் தலைப்பு, ஆய்வுச்சுருக்கம் ஆங்கிலத்தில் தரலாம். ஆங்கில மொழிபெயர்ப்பு கட்டாயம் அல்ல)

கருத்தரங்க நாளன்று ஆய்வாளர்கள் தங்களின் ஆய்வுக் கட்டுரைகளை வாசித்தளிக்க வேண்டும். அவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும். சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகள் ஆய்விதழுக்கு அனுப்பிவைக்கப்படும். அவ்வாறு பெறப்பட்ட கட்டுரைகள் சர்வதேசத் தமிழ் ஆய்விதழின் (UGC - Care Listed Journal) வல்லுநர் குழுவின் மதிப்பீட்டிற்கு உட்பட்டு வெளியிடப்படும். தேர்வு செய்யப்பட்ட கட்டுரையாளர்கள் வெளியீட்டுக் கட்டணம் செலுத்துதல் வேண்டும்.